த. நா.ச.பே. எண் : 022 நாள் :04.08.2014

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை - 4.8.2014

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவை பொதுமக்களுக்கு அளிப்பதிலும், மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதிலும், வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் மீன்பிடித் தொழிலை பெருக்கும் வகையில், புதிய மீன் பிடி துறைமுகங்கள் அமைத்தல், மீன் இறங்கு தளங்கள் அமைத்தல், கடலோர நகரங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைத்தல், உள்நாட்டு மீன் வளத்தை அதிகரித்தல், மீன் விற்பனையை ஊக்குவித்தல் மற்றும் சந்தையை நவீனப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதிலும், மீனவர் நலத் திட்டங்களை, செயல்படுத்துவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், மீன் உற்பத்தியையும் மேலும் மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும், தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும், மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவர்களுக்கு 1,800/–ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையில், மத்திய, மாநில அரசுகள் மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை தலா 600/– ரூபாய் ஆகும். இத்திட்டத்திற்கான தனது பங்குத் தொகையை 600/– ரூபாயிலிருந்து 900/– ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மாநில அரசின் பங்குத் தொகையும் 600/– ரூபாயிலிருந்து 900/– ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய, மாநில அரசுகளின் பங்குத் தொகையுடன், பயனாளிகளின் பங்குத் தொகையான 900/– ரூபாயையும் சேர்த்து, கடல் மீனவர்களுக்கு மீன்பிடி குறைவு கால நிவாரணமாக 2,700/–ரூபாய் வழங்கப்படும். சுமார் 2 லட்சத்து 10 ஆயிரம் கடல் மீனவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 6 கோடியே 30 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2. கடல் மீனவ மகளிருக்கு தமிழக அரசு 1,800/– ரூபாய் நிவாரணமாக வழங்கி வருகிறது. இதில் பயனாளி பங்குத் தொகை 600/– ரூபாய் மற்றும் மாநில அரசு பங்குத் தொகை 1,200/– ரூபாயாகும். கடல் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்குவது போல்; கடல் மீனவ மகளிருக்கும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கும் வகையில், மீனவ மகளிருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகையான 1,800/– ரூபாய் 2,700/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதில் பயனாளியின் பங்குத் தொகை 900/– ரூபாயாகவும், மாநில அரசின் பங்குத் தொகை 1,800/–ரூபாயாகவும் இருக்கும். சுமார் 1 லட்சத்து 90 ஆயிரம் கடல் மீனவ

மகளிர் பயனடையும் இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 11 கோடியே 40 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

3. தமிழ்நாட்டில் தற்போது 7 மீன்பிடி துறைமுகங்களும், 19 மீன் இறங்கு தளங்களும் உள்ளன. மேலும் 4 இடங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்களும், 11 இடங்களில் மீன் இறங்கு தளங்களும் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், கோவளத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம் இரையுமன் துறையில் 7 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் தூத்தூரில் 4 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 17 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும். இந்த மீன் இறங்கு தளங்கள் சுமார் 1,500 மெட்ரிக் டன் மீன்களை சுகாதாரமான முறையில் விரைவாக கையாளப் பயன்படுவதுடன் 625 மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்தவும் வழி வகுக்கும். இதன் மூலம் இப்பகுதிகளைச் சார்ந்த சுமார் 8,300 மீனவர்கள் பயன் பெறுவர்.

4. மீன் குஞ்சு உற்பத்தியை பெருக்கி அதன் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை பெருக்குவதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடும் வகையில், 2014–2015 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டத்தில், பரங்கிப்பேட்டை, ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணை, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் மற்றும் தேனி மாவட்டத்தில் வைகை அணை ஆகிய 4 இடங்களில் உள்ள அரசு மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் 17 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

5. மீன் வளத் துறை அலுவலகங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் பொருட்டு, 2014–2015 ஆம் ஆண்டில் ராமநாதபுரத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மீன் வளத் துறை துணை இயக்குநர் அலுவலகம், ராமநாதபுரம் மாவட்ட மீன் வளப் பணிகளை செயல்படுத்த வடக்கு மற்றும் தெற்கு என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ள இரண்டு மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் மீன்பிடி உட்கட்டமைப்பு பணிகளை செயல்படுத்தி வரும் மீன்பிடி துறைமுக, உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகிய 4 அலுவலகங்களுக்கும் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

இதைப் போலவே, நாகப்பட்டினத்தில் இயங்கி வரும் மீன் வளத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகம், மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகம், மீன் பிடி துறைமுக செயற் பொறியாளர் அலுவலகம் மற்றும் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகிய 4 அலுவலகங்களுக்கும் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். ஆக மொத்தம் 3 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு ஒருங்கிணைந்த மீன் வளத் துறை அலுவலகங்கள் ராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினத்தில் கட்டப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் திட்டங்களின் மூலம் மீன் உற்பத்தி பெருகி, மீனவர்கள் நிறைவான பயன்களைப் பெற்று வாழ்வில் வளம் பெறுவர் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**